https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

04th JUNE 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 30



05

## என்னை புலி என்கிறார்கள்:



06

## அதிர்ச்சி கொடுத்த மைத்திரி



### 15 லட்சம் லீற்றர் எரிபொருளை காணவில்லை:

# கண்டு பிடித்தால் விலையை மேலும் குறைக்கலாம்

கடலில் கப்பலில் வைத்து எரிபொருளை தரை இறக்கும்போது சூட்சுமமான முறையில் எரிபொருள் திருட்டு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது . 02



### பிரித்தானிய விஜயத்தின் பின்

# மோடியைச் சந்திப்பார் ரணில்

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி ஒரு வருடம் நிறைவடையப் போகிறது. ஆனால்,அவரால் இன்னும் இந்திய பிரதமர் மோடியைச் சந்திக்க முடியவில்லை.

பல தடவைகள் பல தரப்பினரின் ஊடாக முயற்சிகளை செய்துவிட்டார். ஆனால்,இன்னும் சந்திப்பு இழுபறியில்தான் உள்ளது.

இந்த நிலையில்,விரைவில் ஜனாதிபதி பிரிட்டன் செல்லவுள்ளார்.பிரிட்டன் போய் வந்ததும் மோடியுடனான சந்திப்பு 02

### புதிய அரசியல் கூட்டணி:



# சம்பிக்க ராஜித வெல்கம தலைமையில்

தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் சம்பிக்க ரணவக்க,ராஜித சேனாரத்ன ,குமார வெல்கம மற்றும் சுயாதீனமாக செயற்படும் எம்பிக்கள் உள்ளிட்ட பலர் இணைந்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

சம்பிக்க அண்மையில் புதிய கட்சி ஒன்றை அங்குரார்ப்பணம் செய்திருந்தார். அதற்கு 02

### இலங்கையில் தோட்டாக்கள் தயாரிப்பு:

# T-56,LMG மற்றும் 9MM தோட்டாக்கள் முதலில்

பாதுகாப்பு செலவைக் குறைக்கும் நோக்கில் இலங்கையிலேயே துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களைத் தயாரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

T-56, LMG மற்றும் 9MM துப்பாக்கிகளுக்கான தோட்டக்களை முதலில் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.இதனைத் தொடர்ந்து அனைத்து துப்பாக்கிகளுக்குமான தோட்டாக்கள் தயாரிக்கப்படும்.

இது தொடர்பான அறிவுள்ள இராணுவ அதிகாரிகள் இராணுவத்துக்குள் இருப்பதால் அவர்களை வைத்தே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக அதிகமான டொலர்களை மீதப்படுத்த முடியும் என்று பிரிகேடியர் மேலும் தெரிவித்தார்.






www.puthusudar.lk
2023 JUNE 30 - SUNDAY

# இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்?

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இனவாதத்தைக் கிளப்புவதும்–கைப்பற்றி முடிந்ததும் அப்படியே கிடப்பில் போடுவதும்–மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மீண்டும் அதைக் கையில் எடுப்பதும் என முடிவில்லாமல் தொடர்கிறது இந்த இனவாத அரசியல்.

இலங்கை போன்ற நாடுகள் ஆட்சியைக் கைப்பற்றும் ஆயுதம் இனவாதம்தான் என்று எழுதப்பட்டுவிட்டது.வங்குரோத்து அரசியலின் இறுதி உறைவிடம் அது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை. ஆனால்,ஆட்சியை கைப்பற்ற வேண்டும்.கொள்ளையடிக்க வேண்டும்.

அப்படியென்றால் அதற்கு ஒரே வழி இனவாதம்தான்.அந்த இனம் எமது இனத்தை அழிக்கிறது: பொருளாதாரத்தை சுருட்டுகிறது. அப்படிச் செய்கிறது் இப்படிச் செய்கிறது என்று புரளியைக் கிளப்பிவிட்டால் அதை நம்பி வாக்களிக்க ஒரு கூட்டம் இருப்பதால் இந்த இனவாதம் இன்றும் வாழ்கிறது.அரசியல் செய்வதற்கு– ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு பெரும் உதவியாக இருக்கிறது.

ஆனால்,இனவாதத்தை ஒவ்வொரு தடவையும் நம்பி வாக்களித்தவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதையும்– அதைக் கிளப்பியவர்கள் அதை வைத்து நன்றாக வாழ்கிறார்கள் என்பதையும்–ஆட்சி ,அதிகாரங்களை கைப்பற்றி நாட்டை நாசமாக்குகிறார்கள் என்பதையும்–அதனூடாக நாசமாகிப் போவது வாக்களித்த நாங்கள்தான் என்பதையும் மக்கள் உணரும்போதுதான் இந்த இனவாதம் அழியும்.

அதற்கு பல உதாரணங்கள் நாட்டில் நடந்துவிட்டன.அதில் ஒன்று போர். போரை வைத்து–தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை வைத்து அரசியல் செய்தவர்கள் வயிற்றை வளர்த்து நிற்க பாதிக்கப்பட்டது இந்த நாடும் நாட்டு மக்களும்தான்.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்.அதிலும் முஸ்லிம் மக்களும்–முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட மக்களும்– எதிராக செயற்படாத மக்களும் என மக்கள் என்ற வட்டத்துக்குள் வருகின்ற அனைவரும் பாதிக்கப்பட்டனர்.

அதிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பம் என்றால் கோத்தாவின் ஆட்சிக் காலம்தான்.தாம் இனவாதத்தை நம்பி மோசம் போய்விட்டோம்அவர்கள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள் : முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இனவாத பிரசாரம் எல்லாம் பொய். அவை எல்லாம் கோத்தா தரப்பு ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக நடப்பட்ட நாடகம் என்பதை மக்கள் புரிந்துகொண்டார்கள்.

அவர்கள் பரப்பிய இனவாதத்தை நம்பியதால் பெற்றோலுக்கும்–கேஸ்'க்கும்–பால் மாவுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப்போட்டதை நினைத்து–ஆத்திரப்பட்டு மக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

அதன் விளைவு ஓட்டம் பிடித்தார் கோத்தா.கோத்தா தரப்பின் வார்த்தையை நம்பி–இனவாதத்தை ஏற்று முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட பல சிங்களவர்கள் உண்மையை உணரத் தொடங்கினர்.அவர்கள் முஸ்லிம்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கத் தொடங்கினர்

இப்படித்தான் டாக்டர் ஷாபி ஷிஹாபிதீனின் விடயமும்.அவருக்கு எதிரான குற்றச்சாட்டு என்னவென்று அனைவரும் அறிவர்.ஆனால்,அது அனைத்தும் கோத்தா தரப்பு ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக வகுக்கப்பட்ட வியூகம் என்பதை இப்போது சிங்கள மக்கள் விளங்கிக்கொண்டனர்.

இப்போது ஷாபி மீண்டும் அவர் ஏற்கனவே பணிபுரிந்த குருநாகல் வைத்தியசாலையில் பணிபுரியத் தொடங்கியுள்ளார்.அவர்மீது குற்றம் சுமத்தியவர்கள் எல்லோரும் இன்று மன்னிப்பு கேட்கத் தொடங்கியுள்ளனர். தாங்கள் இனவாத நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி இருந்தோம்.பிறகுதான் உண்மையை உணர்ந்தோம்.எங்களை மன்னித்துவிடுங்கள் என்று அவர்கள் இப்போது மன்னிப்பு கோரி வருகிறார்கள்.

இப்படி உண்மையை விளங்கி இருக்கின்றமை சந்தோசமான விடயம்தான்.ஆனால்,இந்த நிலை– உண்மையை உணர்ந்த நிலை நீடிக்குமா என்பதுதான் சந்தேகம்.

# இந்திய ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி இரங்கல்

இந்தியாவின் கிழக்கு ஒடிசா மாநிலத்தில் ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானமை தொடர்பில் கேள்வியுற்று மிகுந்த கவலை அடைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில் துயரமான இந்த தருணத்தில் அயல் நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்போம் எனவும் உறுதியளித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேநேரம் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத விதமாக விபத்துக்கு முகம்கொடுத்துள்ள இந்திய அரசாங்கத்திற்கு வலிமையும் தைரியமும் கிட்ட வேண்டுமென பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதியின் விசேட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.







### 15 இலட்சம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சில மாதங்களுக்கு முன்சிங்கப்பூரில் இருந்து வந்த இந்தக் கப்பலில் இருந்து துறைமுகத்தில் வைத்து தரைக்கு எரிபொருள் இறக்கும்போது 15 லட்சம் லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் திருடப்பட்டுள்ளது.

பின்னர் பரீட்சித்து பார்க்கும்போதுதான் இந்த திருட்டு இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் லஞ்ச ,ஊழல் ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகிறது.

இந்த எரிபொருள் சிக்கினால் எரிபொருளின் விலையை மேலும் குறைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### புதிய அரசியல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னதாக குமார வெல்கமவும் கட்சி ஒன்றைத் தொடங்கி இருந்தார்.

இதேவேளை,ராஜித சேனாரத்ன அரசுடன் இணைவதற்கான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில்தான் இவர்கள் ஒன்றிணைந்து புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

### பிரித்தானிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெறும் என்று அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.









# சிங்களவர்கள் ஒவ்வொரு நாளும் என்னிடம் மன்னிப்பு கேட்கிறார்கள்

நான் குற்றமிழைக்கவில்லை என்று இப்போது அறிந்து சிங்கள மக்கள் இப்போது ஒவ்வொரு நாளும் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.மன்னிப்புக்கேட்டு எனது வாட்சப் நிரம்பி வழிகிறது என்று டாக்டர் ஷாபி சிஹாபுதீன் தெரிவித்துள்ளார்.

குருநாகல் வைத்தியசாலையில் மீண்டும் வேலையை பொறுப்பேற்றுள்ள டாக்டர் ஷாபி இது தொடர்பில் மேலும் கூறுகையில்

நான் சிங்கள மக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவன்.எனது தொழிலை மதித்து செயற்படுபவன்.இன்றும் சிங்கள மக்கள் என்மீது அன்பு வைத்துள்ளார்கள்.

நான் அன்றும் குற்றமிழைக்கவில்ல் இனியும் குற்றமிழைக்கமாட்டேன்.அந்தப் பிரச்சினையின்போது என்னை பிழையாக விளங்கிக்கொண்டிருந்த சிங்களவர்கள் இன்று என்னிடம் மன்னிப்புக் கேட்கிறார்கள்.

மன்னிப்பு கேட்டு எனது வாட்சப் நிரம்பி வழிகிறது.இன்னும் முடிவில்லை.எல்லோரும் சிங்களவர்கள்.அப்படி மனிதர்கள் உள்ள நாட்டைத்தான் இவர்கள் குழப்புவதற்கு முயற்சிக்கிறார்கள்.

நான் வேலை செய்யாமல் இருந்த காலப்பகுதியில் கிடைத்த 2.68 மில்லியன் சம்பள பணத்தை எடுத்து மருந்து பொருட்கள் வாங்கிக்கொடுப்பதற்கு நானும் மனைவியும் தீர்மானித்தோம்.

இன்னும் பணம் போட்டு 27 லட்சம் ரூபாவுக்கு இந்தியாவில் இருந்து மருந்து இறக்குமதி செய்தி சுகாதார அமைச்சிடம் ஒப்படைத்தோம்.

இனவாதத்தின் ஊடாக நாட்டை முன் நகர்த்தி செல்ல முடியாது.எனது சம்பவத்தை எல்லோரும் புரிந்துகொண்டு இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.நாம் ஒன்றிணைவோம்ஒன்றிணைத்து நாட்டைக் கட்டி எழுப்புவோம்.என்று கூறினார்.

# சமுர்த்தி வங்கிகளில் ரூ.11 கோடி மோசடி

சமுர்த்தி வங்கிகளில் 2014,2018 காலப்பகுதியில் பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் அவை தொடர்பில் சுட்டிக்காட்டியபோதும் வங்கிகளின் முகாமையாளர்கள் அவற்றைக் கணக்கில் எடுக்கவில்லை என்றும் அரச கணக்காய்வு திணைக்களம் தெரிவிக்கிறது.

இவ்வாறு 11 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# 103 துப்பாக்கிகள் மாயம்

எவன்கார்ட் மற்றும் ரத்னாலங்கா தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்பட்ட 103 துப்பாக்கிகளை என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச கணக்காய்வுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் 2011 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்டவை என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆயுர்வேத வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிப்பு

## – ரிஷாட் எம்.பி. ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பு –



ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும் போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளது.

இம்முறை 100 க்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் வழங்குவது, யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நியமனங்கள் தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனை தொடர்புகொண்டு கவலை தெரிவித்ததையடுத்து, அவர் ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இம்முறை வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில், யூனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமையானது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன், இது யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தான் கருதுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுளார்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில், யூனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவனஞ் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தேவையான பணிப்புரையினை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# போலி சான்றிதழ் ஊடாக பிரிட்டன் சென்ற ஒரு லட்சம் இலங்கையர்கள்

போலி ஆவணங்களை பயன்படுத்தி ஒரு லட்சம் இலங்கையர்கள் பிரித்தானியாவில் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

போலியான கல்வி சான்றிதழ், தொழில் சான்றிதழ் உள்ளிட்ட பல போலி ஆவணங்களை சமர்ப்பித்து அங்கு தொழிலைப் பெற்றுள்ளனர் என்று பிரித்தானிய அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டு அரசு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.



# கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு காரைதீவில் பெரும் வரவேற்பு!





(நூருல் ஹுதா உமர்)

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஐந்து மாவட்டங்களை கடந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருகைதந்த ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு காரைதீவில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 26 நாட்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த 2ம் திகதி காரைதீவிற்கு வருகைதந்த போது மஞ்சள் நீரால் கால்கழுவி பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதயாத்திரை குழுவின் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ், நீராகாரம் வழங்கிய முருகபக்தர் எஸ்.தேவதாஸ் ஆகியோர் பெருவரவேற்பளித்தனர்.

பின்னர் அவர்கள் காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தை தரிசித்து காரைதீவில் முழுநாளும் தங்கியிருந்தனர்.

எதிர்வரும் 11ஆம் தேதி உகந்தை மலையை அடைந்து 12ஆம் தேதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள்.

தொடர் 03

# பிரபாவின் இறுதி நிமிடம்...!!





ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

## பூனைபோல் பதுங்கி பதுங்கி நகரும் படையினர் ...!!!





நகர்கிறது அந்த அணி.ஜயரத்னவின் 8-ஆயுே வுநுயுஆ.மிகவும் அவதானமாக...

ஜேபுஉவு ஏஜளுஜழுே கண்ணாடிகளின் உதவியோடு...

எதிரே பற்றைகள்-சருகுகள்.

கால் வைத்தால் ஒலி எழுப்பும்.

கவனமாகச் செல்கிறார்கள்.சத்தம் எழாதவாறு...

பூனைபோல் பதுங்கி பதுங்கி. ..கைகளால் சருகுகளை ஒதுக்கி ஒதுக்கி...

மிகப் பொறுமையாக...

புலிகள் வசம் சில நாய்கள். அவர்களின் பாதுகாப்புக்காக.

கேட்கிறது சத்தம்.குறைக்கும் சத்தம்

நாய்களின் கண்களிலும் பட்டுவிடக்கூடாது. காட்டிக்கொடுத்துவிடும்.குறைத்து குறைத்து...

புலிகளின் கண்களிலும் பட்டுவிடக்கூடாது.தாக்குதல் நடத்துவார்கள்.

தாக்கினால்.பதுங்குவதற்கு இடமில்லை.வெட்டவெளி.

அதனால் சத்தமின்றி நேரே செல்லுதல்.பங்கருக்குள் பாய்தல்.

இதுதான் ப்லான்...

பங்கர்களை சுற்றி உள்ளே போக முடியாது.சுற்றி கன்னி வெடிகள். நேரேதான் போக வேண்டும்.

நகர்கிறார்கள் மெல்ல மெல்ல.

ஓர் அடி வைப்பதற்குப் பல நிமிடங்கள்.

இரவு 2 மணி.

இப்போது பங்கர்களுக்கு மிக அருகில் படையினர்.

எதிரே ஒரு குழி.பெரும் குழி.அதற்குள் நீர்.

வைக்கிறார்கள் கால்களை உள்ளே.

நகருகிறார்கள் மெல்ல மெல்ல. அதனூடாக.

செல்லச் செல்ல ஆழம்.புதைகின்றன கால்கள்.

முன்னுக்கும் எடுக்க முடியாது. பின்னுக்கும் எடுக்க முடியாது.

நகர்கிறார்கள் சிரமப்பட்டு.நீரின் சத்தம் கேட்காதவாறு...

கடந்துவிட்டார்கள் ஒருவாறு. நெருங்கிவிட்டார்கள் புலிகளை...

வெறும் 50 மீற்றர் தூரம்தான்

மெல்லிய வெளிச்சம் அங்கு.பங்கரின் பக்கம்.

நிழலாய்த் தெரிகிறது புலிகளின் உருவம்.அங்கும் இங்கும் நகரும்போது...

பீடியும் புகைக்கிறார்கள்.தெரிகிறது வெளிச்சம்.வருகிறது நாற்றம்.

இருந்தும், தாக்குதல் நடத்த முடியாது இப்போது.

மறைவதற்கு இடமில்லை. வெட்டவெளியில் படையினர். புலிகள் தாக்கினால் அத்தனை பேரும் சரி.

தேடுகிறார்கள் பாதுகாப்பான இடத்தை...

எதிரே ஒரு மண்மேடு.அதற்கு அப்பால் சுத்தம் செய்யப்பட்ட நிலம்.4 மீற்றர் நீளம். அதற்குள் இறங்க முடியாது.தெளிவாக விளங்கும் புலிகளுக்கு...

கவனமாகக் கடக்க வேண்டும் அதை.

நாயின் கண்களிலும் படக்கூடாது. புலிகளின் கண்களிலும் படக்கூடாது.

எப்படிக் கடப்பது...???

அங்கும் இங்கும் அசைகிறான் அந்த புலி.காவலுக்கு நிற்கும் புலி.

பயன்படுத்துகிறார்கள் அந்த இடைவெளியை...

ஒரு தடவை அந்தப் பக்கம் நகர... பாய்கிறார் ஒருவர்.

இன்னொரு தடவை நகர... இன்னொருவர்.

8 பேரும் இவ்வாறே....

ஒரு மணித்தியாலம் செல்கிறது 8 பேரும் கடப்பதற்கு.

அப்படித் தாண்டியும் பயன் இல்லை.

ஏன் ...???

அதுவும் வெட்டவெளி.பாதுகாப்பு இல்லை.

இங்கும் பங்கர் ஒன்று தேவை. அப்படியென்றால்தான் தப்பலாம். பாதுகாப்பாக தாக்குதல் நடத்தலாம்.

அதற்கு வழி...???

பங்கர் ஒன்றைத் தோண்டுவதுதான்.

தோண்டுகிறார்கள்.வெறும் கைகளால்...

ஆயுதங்கள் பயன்படுத்த முடியாது. சத்தம் கேட்கும்.

கைகள்தான் பாதுகாப்பு.

தோண்டுகிறார்கள் மெல்ல மெல்ல. சத்தம் வெளியே வராமல்...

பாதுகாப்புக்கு இருவர்.ஒருவர் வாவியின் பக்கம். அடுத்தவர் வீதியின் பக்கம்.

6 பேர் தோண்டும் பணியில்...

முடிந்துவிட்டது பணி.இப்போது 8 பேரும் அந்த பங்கருக்குள்.

அவதானிக்கிறார்கள் அதற்குள் இருந்து.ஜேபுஉவு ஏஜளுஜழுே கண்ணாடிகள் ஊடாக...

புலிகளின் பங்கருக்கு பின் இன்னோர் இடம். அது ஒரு குடிசை.

அதற்குள் நுழைவதும் வெளியேருவதுமாக புலிகள்.அது அவர்களின் தூங்கும் இடம்.

திட்டம் ஒன்றை வகுக்கிறார் படையினர்.

என்ன திட்டம்...???

பார்ப்போம் அதை தொடர் -4 இல்...

**மெல்லிய வெளிச்சம் அங்கு. பங்கரின் பக்கம். நிழலாய்த் தெரிகிறது புலிகளின் உருவம். அங்கும் இங்கும் நகரும்போது... பீடியும் புகைக்கிறார்கள். தெரிகிறது வெளிச்சம். வருகிறது நாற்றம். இருந்தும், தாக்குதல் நடத்த முடியாது இப்போது. மறைவதற்கு இடமில்லை. வெட்டவெளியில் படையினர். புலிகள் தாக்கினால் அத்தனை பேரும் சரி. தேடுகிறார்கள் பாதுகாப்பான இடத்தை...**



- நாட்டில் இப்போது இருக்கின்ற பிரச்சினைகளுள் முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை எது?
- நீங்கள் அரசியலுக்கு வந்தது ஏன்?
- நீங்கள் இரட்டை பிரஜா உரிமை உடையவரா?
- இலங்கையின் பாரம்பரிய அரசியல் கலாசாரத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?
- அரசியல் தீர்வாக சமஷ்டியே வேண்டும் என்று நீங்கள் பிடிவாதமாக நிற்பது



# என்னை புலி என்கிறார்கள்: காரணம் இதுதான்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்பி ராசமாணிக்கம் சாணக்கியன்.அவரது முழுக்கையான பேட்டி கீழே:

**கேள்வி : நாட்டில் இப்போது இருக்கின்ற பிரச்சினைகளுள் முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை எது ?**

பதில் : ஸலஸவநஅ உாயபெந.இதை மாற்றுவதன் மூலம்தான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வை முன்வைக்க முடியும்.

இப்போது மாவின் விலையை-எரிபொருளின் விலையைக் குறைத்தால் போதும் என்று சிலர் நினைக்கலாம்.அந்த விலைகள் எக்காலத்திலும் மக்களுக்கு சாதகமானதாக அமைய வேண்டுமென்றால் ஸலஸவநஅ உாயபெந.ஊடாக ஒரு விலைக்கு கொண்டு வர வேண்டும்.

கடந்த வருடம் மக்கள் இதற்காகவே போராடினார்கள்.அதைச் செய்வதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம்.

**கேள்வி : நீங்கள் அரசியலுக்கு வந்தது ஏன்?**

பதில் : சிறிய வயதில் இருந்து எனக்கு அரசியலில் ஆர்வம் அதிகம். அது போக.எனது குடும்பமும் அரசியல் குடும்பம்.

எனது பாட்டனார் 1952 இல் இருந்து 1970 வரை தமிழரசு கட்சி மூலம் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதிவப்படுத்தியவர்.4 தடவைகள் தமிழரசு கட்சியின் தலைவராக இருந்துள்ளார்.

நான் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்து பிறகு செல்லவில்லை. சிறிலங்கா சுதந்திர கட்சியில் இருந்தே எனது அரசியல் பயணத்தைக் தொடங்கினேன்.

பிறகு 2016,2017 காலப்பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயலாற்றத் தொடங்கினேன்.நான் ஒரு கணக்காளராக இருந்தும்,எனக்கு அதில் ஆர்வம் இருக்கவில்லை.

**கேள்வி : நீங்கள் இரட்டை பிரஜா உரிமை உடையவரா?**

பதில் : இல்லை.அவுதிரேலியாவில் இருந்ததற்கு நான் அங்கு பிரஜா உரிமை பெறவில்லை.எனது விருப்பம் இலங்கைக்கு வர வேண்டும் என்பதுதான்.

அதன்படி வந்தேன்.மீண்டும் செல்லவில்லை.

**கேள்வி : இலங்கையின் பாரம்பரிய அரசியல் கலாசாரத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

பதில் : பாரம்பரிய அரசியல் என்பது எல்லா கட்சிகளும் இனவாதத்தை அடிப்படையாக வைத்துச் செய்வது.எதிர்காலத்தில் இந்த கோசத்தோடு செல்ல முடியாது.

2025 தேர்தலில் இது எடுபடாது. அடிமட்டத்தில் பொருளாதாரப் பிரச்சினை இருக்கிறது.பொருளாதார பிரச்சினையை தீர்க்கப்போகும் தரப்புக்குத்தான் மக்கள் இனி வாக்களிக்கப் போகிறார்கள்.

**கேள்வி : அரசியல் தீர்வாக சமஷ்டியே வேண்டும் என்று நீங்கள் பிடிவாதமாக நிற்பது ஏன்?**

பதில் : நான் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசினால் என்னை இனவாதி என்றும் புலி என்றும் சமூக ஊடகங்களில் திட்டுகிறார்கள்.

இப்போது மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகி இருக்கும் அரசியல்வாதிகள் அதிக பணம் செலவழித்து பேஷ்புக் ஊடாக அடுத்தவர்களுக்கு சேறு பூசி வருகிறார்கள்.

சமஸ்டி தீர்வு தேவை என்று முதலில் கூறியது தமிழர்கள் அல்லர். சிங்களவர்கள்.எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கதான் முதலில் சமஸ்டி பற்றிக் கூறியவர்.

தமிழர்களின் பிரச்சினை சிங்கள மக்களின் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டது.

இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பண்டா-செல்வா ஒப்பந்தம் ,டட் லி-செல்வா ஒப்பந்தம் என பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

அவை எவற்றையும் கணக்கில் எடுக்காது-அவற்றால் பிரச்சினையை தீராது என்று முடிவெடுத்த இளைஞர்கள் யுத்தம் செய்தனர்.

இதற்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்பு கிடையாது. தமிழ் அரசியல்வாதிகள் பலரும் கொல்லப்பட்டனர்.

அரசியல்ரீதியாக எமது பிரச்சினை தீர்க்கப்படாமைதான் இந்த 30 வருட போர் இடம்பெறக் காரணம்.

அமைச்சுப் பதவிகளை பெறுவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி பிரச்சினை தீர்ந்தால் தெற்கு மக்களின் பிரச்சினைகளும் தீரும்.அவர்களின் பிரச்சினைகளும் தீரும் வகையில் அவர்களுக்கும் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்காமல் இலங்கையை சிங்கப்பூராக மாற்ற முடியாது.

போர் முடிந்தாலும் பிரச்சினை முடியவில்லை.அதனை நன்கு உணர்ந்ததால்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரப் பகிர்வு வழங்குவதுபற்றிக் கூறுகிறார்.

காணி அதிகாரம் கேட்டால் வடக்கு-கிழக்கில் உள்ள காணிகள் அனைத்தும் தமிழர்களுக்கு வழங்கப்படப் போகிறது எண்ணுகிறார்கள்.

அதேபோல்,பொலிஸ் அதிகாரம் கேட்டாலும் அப்படியேதான் நினைக்கிறார்கள்.

பாரம்பரிய அரசியலின் ஊடாக இதுபற்றி பிழையாக மக்களுக்கு சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

அதிகாரப்பகிர்வு என்பது நவீன-மிகவும் பயனுடைய முறைமை. ஒவ்வொரு மாகாணங் களுக்கும் தனித்தனியாக அதிகாரப் பகிர்வை வழங்கினால் அந்த மாகாணங்கள் துரிதமாக முன்னேறும்.

அதிகாரப் பகிர்வின் ஊடாகப் பொருளாதார த்தைக் கட்டி எழுப்ப முடியும்.

75 வருடங்களாக செய்ய முடியாதவற்றை இப்போதாவது செய்வோம்.

**கேள்வி : சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து நீங்கள் அரசியல் செய்தமை பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா?**

பதில் : நிச்சயமாக..இப்படி ஒரு கொலைகாரக் கூட்டத்தோடு இணைந்து அரசியல் செய்தமைக்காக நான் கவலைப் படுகிறேன்.அதற்காக நான் மக்களிடம் மன்னிப்பும் கேட்டிருக்கி றேன்.நாடாளு மன்றில் இதை நான் கூறி இருக் கிறேன்.

இப் போது நான் சரியான கொள்கையை தெரிவு செய்துள்ளேன். அதுதான் எனது கொள்கையும்.அதிகாரப்பகிர்வு என்ற கொள்கை.

**கேள்வி : உங்களது எதிர்கால அரசியல் இலக்கு என்ன?**

பதில் : இப்போது சொல்வது கஷ்டம்.அதற்காக அமைச்சுப் பதவியை ஏற்று அரசுடன் இணையவும் முடியாது.அது எனது கொள்கைக்கு எதிரானது.-என்றார்.

***

> ஒரு கொலைகாரக் கூட்டத்தோடு இணைந்து அரசியல் செய்தமைக்காக நான் கவலைப்படுகிறேன். அதற்காக நான் மக்களிடம் மன்னிப்பும் கேட்டிருக்கிறேன். நாடாளுமன்றில் இதை நான் கூறி இருக்கிறேன்.

# பசிலின் கேம்

அந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வைப்பதற்காக உள்நாட்டில் அங்கும் இங்கும் கிடந்த எம்பிக்களை நாடாளுமன்றத்துக்கு கொண்டு போய்ச் சேர்க்கும் வேலையை செய்த அரசு வெளிநாடுகளில் இருந்த எம்பிக்களையும் அமைச்சர்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

வாக்கெடுப்புக்குச் சில நாட்களுக்கு முன்பே வெளிநாடுகளில் இருந்த எம்பிக்கள் பெயர் பட்டியலை எடுத்து–அவர்களுடன் தொடர்புகொண்டு வாக்கெடுப்பு தினத்தன்று நாடாளுமன்றில் நிற்பதை உறுதிப்படுத்தும் வேலையையும் கட்சிதமாகச் செய்தது அரசு.

இந்த பணியை முன்னின்று வெற்றிகரமாகச் செய்து முடித்தவர் பசில் ராஜபக்ச.அவர் அவரது பங்களிப்பை இதற்கு அழகாக வழங்கினார்.

ஜனகவை பதவி விளக்குவது அவ்வளவு முக்கியமாக இருந்தது அரசுக்கு.





துப்பறிவாளன்

# வாக்களிப்பதற்கு ஹெலிகொப்டரில் வந்த இராஜாங்க அமைச்சர்

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அப்பதவியில் இருந்து விளக்குவதற்காக நாடாளுமன்றில் வாக்கெடுப்பு இடம்பெற்றது அல்லவா.

அதை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்பதில் அரசு குறியாக இருந்தது.முடியுமானவரை அரச எம்பிக்களை நாடாளுமன்றத்துக்கு வரவைப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்தது.

சிலரால் வர முடியவில்லை.

அவ்வாறு வர முடியாத நிலையில் இருந்தவர்களுள் இராஜாங்க அமைச்சர் லோஹான் ரத்வத்தயும் அடங்குவார்.அவர் அப்போது வெளியூரில் நின்றார்.

ஆனால், ஜனாதிபதியின் மனதில் இடம்பிடிப்பதற்காக எப்படியாவது நாடாளுமன்றத்துக்கு போகவே வேண்டும் என்று உறுதி பூண்டார்.

அதனால் அவர் ஹெலிகொப்டரை புக் செய்து அதில் வந்து இறங்கினார் நாடாளுமன்றில்...

# கைவிரித்த ஜனாதிபதி



அலி சப்ரி எம்பி தங்கம் கடத்தி வந்து விமான நிலையத்தில் சிக்கியது தெரியும்தானே.

அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அதுபற்றி முதலில் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தது ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவுக்கு.

"உண்மையில் அது சப்ரியின் பொருட்கள்தானா... சரியாக கென்போர்ம் பண்ணினீங்களா ..?

என்று பணிப்பாளரிடம் கேட்டார் செயலாளர்.

ஆம்.அவரிடம் 3 ரிசிட்டும் இருந்துச்சு:. என்று பதிலளித்தார் பணிப்பாளர்.

அப்போது ஜனாதிபதி ஜப்பானில்.

ஜனாதிபதியை உடனே தொடர்புகொண்டு இந்தத் தகவலை எத்திவைத்தார் செயலாளர். என்ன செய்வது என்று வினவினார்.

இந்த விடயத்தில் எம்மால் தலையிட முடியாது.சட்டம் கடமையைச் செய்யட்டும் என்று கூறி கைவிரித்துவிட்டார் ஜனாதிபதி.

# அதிர்ச்சி கொடுத்த மைத்திரி



அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை்நிரந்தர நண்பனும் இல்லை.

இதை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளார்.

அது எப்படி தெரியுமா?

ஓரிரு நாட்களுக்கு முன் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் மாமா காலமானார்.அவரது பூத உடல் பொரளை மலர்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

பல அரசியல்வாதிகள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.அவ்வாறு செலுத்தியவர்களுள் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவர் அஞ்சலி செலுத்தியதில் என்ன அதிர்ச்சி உள்ளது என்று நீங்கள் யோசிக்கலாம்.

2015 இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மைத்திரி சிறிலங்கா சுதந்திர கட்சியில் இருந்து பாய்ந்ததில் இருந்து இன்றுவரை மைத்திரியும் ரொஷானும் கீரியும் பாம்பும்.

மைத்திரி 2019 ஜனாதிபதி தேர்தலில் கோத்தாவுக்கு ஆதரவு வழங்கியபோதிலும் ரொஷான் மைத்திரியை எதிரியாகவே பார்த்தார்.

எந்தவொரு தேர்தல் மேடையிலும் மைத்திரியை விமர்சிக்கத் தவறியதில்லை.

2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் அது தொடர்ந்தது.இப்போதும் அப்படித்தான்.

இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும்கூட.பொலன்னறுவை மாவட்டம்.

இந்த நிலையில்,ரொஷானின் மாமாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த திடீரென மலர்ச்சாலைக்கு நுழைந்தார் மைத்திரி.அஞ்சலி செலுத்தினார்.

அதிர்ந்து போனார் ரொஷான்.எதிர்பார்க்கவே இல்லை அவர்.

அஞ்சலி செலுத்திவிட்டு ரொஷானுடனும் நல்லமுறையில் பேசிவிட்டு சென்றுவிட்டார் மைத்திரி.

ஒரு தடவை அல்ல.இரு தடவைகள்.

ஆம்..மீண்டும் ஒரு தடவை சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதுதான் அரசியல்....

# ஜோரா ஒரு தடவ கை தட்டுங்கோ....!!!



ஐக்கிய தேசிய கட்சியின் திவுலபிட்டிய தொகுதியின் கூட்டம் கட்சியின் தவிசாளர் வஜிர அபாயவர்தனவின் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

அப்போது அவர் கூட்டத்தை இப்படி ஆரம்பித்தார்.

கேஸ் வரிசையில் நின்றவர்கள் கை உயர்த்துங்கள் என்றார்.எல்லோரும் உயர்த்தினர்.

இப்போது பெற்றோல் வரிசையில் நின்றவர்கள் கை உயர்த்துங்கள் என்றார்

அதற்கும் எல்லோரும் உயர்த்தினர்.


அப்போது அவர் சொன்னார். இந்த நிலை இப்போது மாறிவிட்டது.இதற்கு காரணம். எமது தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதான்.

அவருக்கு எல்லோரும் ஜோரா ஒரு தரம் கை தட்டுங்கோ என்றார்.

எல்லோரும் பெரும் சத்தத்தோடு கை தட்டினர்.

என்னடா கூத்து இது என்றார்கள் கை தட்டியவர்களே.

# எப்போதும் தாமதம்



ஜனாதிபதி விக்ரமசிங்க சிங்கப்பூர் மற்றும் அதனைத் தொடர்ந்து ஜப்பான் செல்லும் பயணத்தில் அவரது பாதுகாப்பு அணி ஒன்றும் செல்வதற்குத் தயாரானது.

அவர்களின் பயணம் சிறிலங்கன் எயார்லைன் விமானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி புறப்பட்டு 30 நிமிடங்களில் இந்த பாதுகாப்பு குழு அடுத்த விமானத்தில் அதாவது, சிறிலங்கன் எயார்லைன் விமானத்தில் செல்ல வேண்டும்.

ஆனால்,விமானமோ தாமதமாகிவிட்டது. சும்மா அரை மணிநேரம் ,ஒரு நேரம் அல்ல.ஐந்து மணி நேரம்.

இந்த விமானம் ஏற்கனவே தாமதத்துக்கு பெயர் போனது.

இதனால்தான் ஜனாதிபதிகூட இந்த விமானத்தில் செல்வதில்லை. நாட்டு விமானத்தையே தவிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் ஜனாதிபதி.

அவர் சிங்கப்பூருக்குச் சென்றது ளுழுருவூ நுயுளுவு யுளுஐயுே விமானத்தில்...

அண்மையில் பிரித்தானிய மன்னர் முடி சூட்டும் விழாவுக்கு ரணில் சென்றார் அல்லவா.அப்போதுகூட அவர் சிறிலங்கன் எயார்லைனை பயன்படுத்தவில்லை.அவர் சென்றது எமிரேட்ஸ் விமானத்தில்..

# ஓயாத பிரதமர் போட்டி:

## பசில்–யோஷித சண்டை:

# சஜித்தை பிரதமராக்குவதற்கு நாமல் யோசனை

ஊடகவியலாளர்
எம்.ஐ.முபாறக்

பிரதமர் பதவியை மீண்டும் கைப்பற்றும் மஹிந்த தரப்பின் போட்டி இன்னும் ஓயவில்லை.

தனக்கு பிரதமர் பதவியை பெற்றுத் தருமாறு மஹிந்த ராஜபக்ஸ கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் என்று அறிய முடிகிறது.

ஆனால்,நாமல் ராஜபக்ஸ வுக்கு இதில் உடன்பாடில்லை.

கடந்த வருடம் மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பல வழிகளில் மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுத்து வந்தார்.

அப்போது நாமல் ராஜபக்ஸ வையும் ரோஹித ராஜபக்ஸ வையும் அழைத்து மஹிந்த விலக வேண்டும் என்ற அழுத்தத்தை அவர்களின் ஊடாகவே கொடுத்தார் கோத்தா.



அவர்கள் இருவரும் மஹிந்தவிடம் போய் இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தனர். அத்தோடு மஹிந்த விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் அவர்கள் இருவரும் இருந்தனர்.

ஆனால், யோஷித ராஜபக்ச இதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தார். அதாவது,விலகக்கூடாது என்ற நிலைப்பாட்டில்.

இப்போதும் அப்படித்தான்.

மஹிந்த மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்வதை அறிந்த நாமல் ராஜபக்ச அவரைத் தொடர்புகொண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். உங்களுக்கு அந்தப் பதவி வேண்டாம் என்று கூறினார்.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த நாமல் ஜனாதிபதியிடம் அதே நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அவர் மஹிந்தவுக்கு பிரதமர் பதவி வேண்டாம் என்று கூறியது மாத்திரமன்றி அந்தப் பதவியை யாருக்கு வழங்க வேண்டும் என்ற யோசனை ஒன்றையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவை அரசுக்குள் உள்வாங்கி அவருக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்பதுதான் அந்த யோசனை.

தான் உள்ளிட்ட மொட்டு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து எதிர்கட்சித் தலைவரின் பதவியை கைப்பற்றுவதுதான் நாமலின் திட்டம்.

அதற்காகத்தான் அவர் சஜித்துக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார்.

ஆனால், யோஷித ராஜபக்சவும் அதே பழைய நிலைப்பாட்டில்தான் இப்போதும்.மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலகக்கூடாது என்பதுதான் அவரது நிலைப்பாடு.

2022 மே 9 ஆம் திகதி மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்குத்தான் தீர்மானித்திருந்தார். அவரை விலக வேண்டாம் என்று தடுத்தவர்கள் ஜோன்சன் பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர்.

அவர்கள் முதலில் கைக்குள் போட்டது யோஷித்த ராஜபக்ஸவை. இதனால் யோஷித்த அப்போது மஹிந்த விலகக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தார். இப்போதும் அதே நிலைப்பாட்டில்தான்.



ஆனால், பசில் ராஜபக்ச மஹிந்தவுக்கு பிரதமர் பதவி தேவை இல்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.

அதாவது,நாமலும் பசிலும் ஒரே நிலைப்பாட்டில். யோஷித்த அதற்கு எதிரான நிலைப்பாட்டில்.

இதனால் யோஷிதவுக்கும் பசிலுக்கும் இடையில் அண்மையில் கடும் வாய்த்தர்க்கம் ஒன்று இடம்பெற்றது.

அந்தச் சண்டையோடுதான் துபாய்க்குச் சென்றார் பசில்.

இதைக் கேள்விப்பட்ட மொட்டு கட்சியின் சிலர் தலையிட்டு இருவருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு இன்னும் முடிவில்லாமல் தொடர்கிறது பிரதமர் பதவியைக் கைப்பற்றும் போட்டி.

ஆனால், பிரதமர் பதவியில் மாற்றம் செய்வதற்கு ஜனாதிபதிக்கு விருப்பமில்லை என்றே தெரிகிறது.

அதனால் தப்பியது பிரதமர் தினேஷின் தலை. இப்போது வரை....




முன்னணி நிறுவனமான ளுசமை டுயமெய யுளளழஉயைவழைெ கழச ளுழகவறயசந ளுநசஎஉைநள ஊழஅியநைள – ளுடுயுளுளுஊழுஆ இன் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை இன்று (30) நடைபெற்றது. தொழில் வழிகாட்டல் பிரிவு பணிப்பாளர் பேராசிரியர். அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் அதியாகவும், ளுடுயுளுளுஊழுஆ நிறுவன தலைவர் ஆஷிக் அலி சிறப்பு பேச்சாளராகவும் கலந்து கொண்டனர். (நூருல் ஹுதா உமர்)

# பொன்விழாக் காணும் ஜாமியா நளீமியா

இலங்கையில் பேருவளை மண்ணில் அமையப் பெற்றிருக்கும் முஸ்லிம்களின் கல்விக்கான கலங்கரை விளக்காக கருதப்படும் ஜாமியா நளீமியா கலாபீடம் 2023 ஜூன் மாதத்தோடு ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து பொன்விழாக் காணுகிறது.

இவ்வுயர் கல்வி நிறுவனம் 1973ஆம் ஆண்டு, இலங்கை முஸ்லிம்களின் முன்மாதிரியான அல்-ஹாஜ் நளீம் அவர்களால் நிறுவப்பட்டது. அது முஸ்லிம் மாணவர்களுக்கு விரிவான மற்றும் ஆழமான மார்க்கக் கல்வியை வழங்கும் நிறுவனமாகவும், இளந் தலைமுறையினரை இஸ்லாமிய கற்கைகள் நோக்கி தூண்டக் கூடிய ஒரு சக்தியாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

சிறந்த இஸ்லாமிய மார்க்க அடித்தளத்தையும், ஒழுக்க விழுமியங்களால் நிரம்பிய மற்றும் பலதரப்பட்ட துறைகளில் நிபுனத்துவத்தையும் பெற்ற ஒரு தலைமுறையை உருவாக்குவதை நோக்காக கொண்டு இந்நாள் வரை இந்நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய கற்கைகள் மூலம் பெற்றுக் கொள்கின்ற ஆழமான அறிவோடு சேர்த்து உலக மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலான சமூகவியல் கற்கைகளிலும் அவர்களை தயார்படுத்தும் தளமாக இருக்கிறது.

சாதாரண தரப் பரீட்சையை தொடர்ந்து உயர்தரப் பரீட்சை வரையுள்ள மூன்று வருடங்களும் விஷேட பட்டப்படிப்புக்கான நான்கு வருடங்களும் உள்ளடங்களாக மொத்தம் ஏழு வருட கற்கையை நளீமியா, மாணவர்களுக்கு வழங்குகிறது.

இந்த காலப்பகுதி ஒரு மாணவரின் முக்கியமான, வாழ்க்கையை மாற்றியமைக்கும் காலப்பகுதியாக இருக்கிறது எனவே இக்காலப்பகுதியை வளப்படுத்தும் நோக்குடனே இந்நிறுவனத்தின் கல்வித்திட்டம் வடிவமைக்கப்படுள்ளது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஜாமியா நளீமியாவில் முதல் மூன்று ஆண்டுகளும் அடிப்படைக் கற்கை நெறிகள் பிரிவால் மாணவர்கள் அரபு உட்பட ஏனைய மூன்று மொழிகளிலும் மற்றும் இஸ்லாமிய மார்க்க நெறியின் அடிப்படை விடயங்களிலும் சிறப்பாக தேர்ச்சிப்படுத்தப்பட்டு இஸ்லாமிய கற்கை நெறிகள் பீடத்தின் நான்கு வருட பட்டப்படிப்புக்கு தயார் படுத்தப்படுகிறார்கள்

நளீமிய்யாவின் பாடத்திட்டமானது இஸ்லாமிய கற்கை நெறிகளோடு சேர்த்து மாறிவரும் காலத்துக்கேற்றவாறு நவீன கற்கைகளையும் உட்பொதித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அல்-குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய சட்டவியல், இஸ்லாமிய வரலாறு மற்றும் அரபு மொழி போன்றனவும் இவற்றுக்கு மேலதிகமாக சமாதானக் கற்கைகள் மற்றும் இலங்கையின் பிரதான நான்கு மதங்கள் பற்றிய கற்கை போன்ற நவீன சமூக விஞ்ஞான கற்கைகளுடன் தொடர்பான பாடங்களும், அரபு, தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

நவீன உலகில் விமர்சன ரீதியான சிந்தனை, ஆராய்ச்சித் திறன் மற்றும் அறிவுபூர்வமான கேள்விகளை எழுப்புவதன் மூலம் இஸ்லாத்தின் அடிப்படைகளை விளங்கிக்கொள்தல் என்ற சிந்தனையோடு சேர்த்து நடு நிலைச் சிந்தனையையும் ஜாமியா நளீமியா ஊக்குவிக்கிறது.

நளீமிய்யாவில் அறிவு மற்றும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் பாடங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன, அவர்கள் வெறுமனே கற்பித்தலைச் செய்யாமல் மாணவர்களுக்கான வழிகாட்டிகளாகவும் செயல்படுகிறார்கள். ஒவ்வொரு மாணவரினதும் தனிப்பட்ட அறிவு, பண்பாட்டு சார் வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியில் பங்களிக்கின்றனர்.

கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு அப்பால், ஜாமியா நளீமியா பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய ஆளுமை உருவாக்கம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

அதேநேரம் பரஸ்பர அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் நெகிழுந்தன்மை போன்ற விடயங்களையும் மாணவர் மத்தியிலும் சமூகத்திலும் அதிகமாக ஊக்குவிக்கிறது.


இந் நிறுவனம் மாணவர்களை சமூக நலச் செயல்பாடுகள், மதங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டு முயற்சிகளில் பங்கேற்றல் மற்றும் புரிந்துணர்வுடன் கூடிய சூழலை வளர்த்தல் போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது.

ஜாமியா நளீமியாவில் பட்டம் பெற்று வெளியேறிய பல மாணவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச பரந்து விரிந்துள்ளன. உலகின் பல பாகங்களிலும் இவர்கள் அறிவு மற்றும் புரிந்துணர்வை போதித்து வளர்க்கக் கூடியவர்களாக உள்ளனர்.

மேலும், ஜாமியா நளீமிய்யா இஸ்லாமிய மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் அதன் பட்டதாரிகளால் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகள் மூலம் இஸ்லாத்தின் வளமான அறிவுசார் பாரம்பரியத்தை ஆராய்வதில் ஆர்வமுள்ள புத்திஜீவிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு முக்கியமான ஒரு மையமாக மாறியுள்ளது.



Marhoom Al-Haj Naleem
(Founder of Jamiah Naleemiah)




பல்கலைக்கழகங்களுக்கு சென்று வெவ்வேறு துறைகளில் கலாநிதி, முதுமானி மற்றும் இளமானி பட்டங்களை பெற்றிருக்கின்றனர். இதுவரை ஜாமியா பட்டதாரிகளில் 27 பேர் கலாநிதிகளாக பட்டம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர்கள் அறிஞர்கள், எழுத்தாளர்கள், பயிற்றுனர்கள், விரிவுரையாளர்கள், உயர்ஸ்தானிகர்கள், வழக்கறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாக சமூகத்தினருக்கு பல சேவைகளை செய்து வருகின்றனர்.

இவர்களது சேவைகள் மற்றும் புகழ் இலங்கைக்கு அப்பாலும் கல்விசார் தேர்ச்சி, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சமூக சேவைக்கான ஜாமியா நளீமியாவின் அர்ப்பணிப்பு இலங்கைக்குள்ளும் சர்வதேச அளவிலும் பரவலான அங்கீகாரத்தை பெற்றுள்ளமை முக்கியமான விடயமாகும்.

நளீமிய்யாவின் பழைய மாணவர் அமைப்பானது சமூகத்திற்கு நேர்மறையாகப் பங்களிக்கத் தகுதியுள்ள, நன்கு தேர்ச்சி பெற்ற மாணவர்களை நிறுவனம் தயார் செய்வதற்கும், நிறுவனத்தின் வெற்றிக்கும் ஒரு பக்க பலமாக இருந்து வருகிறது.

எனவே எல்லாம் வல்ல இறைவனின் அருளுடன் இந்த ஆண்டு ஜாமியா நளீமியா 50 வருடங்களை நிறைவு செய்து இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றிலும் மக்களின் மனதிலும் அசைக்கமுடியாத ஒரு இடத்தைப் பெற்றுள்ளது.

ஜூன் 24 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், பல பிரபலமான தேசிய பிரமுகர்களின் பங்கேற்புடன் அதன் பொன்விழா மற்றும் பொது பட்டமளிப்பு விழாவை பிரமாண்டமான முறையில் கொண்டாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ காலித் ரிஸ்வான்)



# Christell உதயம்



இலங்கையின் நம்பிக்கையை வென்ற அழகியல்சிகிச்சை நிலையமான Christell Skin Clinic, Christell குரூப்பின் புதிய ஊாசளைவநடட சர்வதேச நிறுவகத்தை நிறுவியுள்ளது. அத்துடன், இலங்கையில் முதன் முறையாக புரட்சிகரமான mesoestetic age element® சிகிச்சையையும் அறிமுகம் செய்துள்ளது.

ரமணி அரசகுலரட்ன சர்வதேச அகடமியின் 30 வருட கால வரலாற்றுப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், சிறந்த அழகியல் மற்றும் கலைப் பயிற்சிகளை இலங்கையின் அழகியல் கலைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் Christell சர்வதேச நிறுவகம் நிறுவப்பட்டுள்ளதுடன், இலங்கையின் அழகியல் கட்டமைப்பை முன்நோக்கி கொண்டு செல்வதில் முக்கிய பங்கையும் வகிக்கின்றது.

ஹில்டன் கொழும்பு ரெசிடென்சிஸில் மே மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற பிரத்தியேக நிகழ்வில், அகடமியின் முதல் தொகுதி மாணவர்கள் அறிமுகம் செய்யப்பட்டு, ஸ்பெய்ன் நாட்டிலிருந்து விஜயம் செய்திருந்த சர்வதேச பயிற்றுவிப்பாளர்களிடமிருந்து, புதிய anti-aging facial செய்முறைகள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

age element® anti-aging தீர்வு, சருமம் முதிர்வடையும் அறிகுறிகளை இல்லாமல் செய்யும் வகையில் காப்புரிமை பெற்ற சிகிச்சை முறையாக அமைந்திருப்பதுடன், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அழகை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.




# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் வியாபார ஆலோசனை அமர்வு

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் இரு வியாபார ஆலோசனை அமர்வுகளை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. அங்குள்ள வாடிக்கையாளர்களுக்கு வியாபார ஆயுள் சுழற்சி முகாமைத்துவ வழிகாட்டல்கள் மற்றும் நிதி ஆலோசனைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தற்போதைய பொருளாதார சூழலில் இலாபகரத்தன்மையை பேணி, வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் வியாபாரங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதாக இந்தத் திட்டம் அமைந்திருந்தது.

இதில் இரு வளவாளர்களின் பங்கேற்றனர். யாழ். பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி. ரி. வேல்நம்பி, யாழ். நிகழ்வில் உரையாற்றியிருந்ததுடன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் கலாநிதி. கணேஷ் சுரேஷ் மட்டக்களப்பு நிகழ்விலும் உரையாற்றியிருந்தார்.



# பொன்னியின் செல்வன் 2 யை கண்டுகளித்த Dialog Club Vision அங்கத்தவர்கள்



பொன்னியின் செல்வன் 2, யாழ்ப்பாணம் Regal Silver திரையரங்கில் Dialog Club Vision அங்கத்தவர்களுக்கென பிரத்தியேகமாக திரையிடப்பட்டது. அவர்கள் தமது அன்புக்குரியவர்களுடன் கண்டுகளித்தனர்.

அங்கத்தவர்கள் திரைப்படத்தின் பிரமிக்கவைக்கும் காட்சிகளையும், நடிகர்களின் நடிப்பையும் பல்லாண்டு பழைமை வாய்ந்த நாவல் திரைக்கதையாக வடிவமைக்கப்பட்ட விதத்தையும் வாயார புகழ்ந்தனர்.

Dialog Club Vision அங்கத்தவர்களுக்கு கிடைக்கப்பெறும் ஏராளமான அனுகூலங்களில் இதுவும் ஒன்று. தனது அங்கத்தவர்களுக்கு பிரத்தியேகமான சேவை தனித்துவமான அனுபவங்களையும் வழங்கும் அர்ப்பணிப்புக்கு இதுவும் ஒரு சான்று.




# நான்கு லட்சாதிபதிகள் தெரிவு

மக்கள் வங்கியின் ‘People's Remittance கோடி அதிர்ஷ்டம் 2023“ ஊக்குவிப்பின் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான லட்சாதிபதி வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதற்கான குலுக்கல் சீட்டிழுப்பு அண்மையில் கொழும்பு 10 இல் உள்ள மக்கள் வங்கி, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை வளாகத்தில் இடம்பெற்றது.

2023 ஜனவரி 01 முதல் மே 13 வரையிலான காலப்பகுதிக்கான வாராந்த வெற்றியாளர்களும் இந்நிகழ்வில் குலுக்கல் சீட்டிழுப்பு மூலமாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், அவர்களுக்கு தலா ரூபா 100,000 பரிசாக வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் சிறந்த வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும் அயராது உழைத்து வருகின்ற இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், போற்றிப் பாராட்டுவதற்காகவும் “கோடி அதிர்ஷ்டம் 2023“ என்ற சீட்டிழுப்பினை மக்கள் வங்கி ஆரம்பித்திருந்தது.






உன்னதமான சமையல் அனுபவங்களுடன் மனதைக் கவரும் Coke Kottu Beat Party கம்பஹா மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் நடைபெற்றன. இந்த நிகழ்வை காண்பதற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குழுமியிருந்தனர். கலந்து கொண்டவர்களுக்கு சுவையான கொத்து வகைகள் ருசிப்பதற்கும், நேரடி இசை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்தன.

# தேசிய கொள்கை மன்றத்தை நடாத்திய ILO



சர்வதேச தொழிலாளர் தாபனம் (ஐடுழு) ஆனது, இலங்கை மத்திய வங்கி, வடமாகாண ஆளுநர் அலுவலகம், இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து இளைஞர் தொழில்முனைவோரை ஊக்குவிப்பது மற்றும் இலங்கையில் தனியார் துறை முதலீடுகளை பாரிய அளவில் உருவாக்குவது ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையிலான தேசிய கொள்கை மன்றத்தை (National Policy Symposium) அண்மையில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது.

பிராந்திய ரீதியான மற்றும் துறைசார் விடயங்களை கவனத்தில் கொண்டு, இலங்கையில் நிறுவன மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான சாதகமான சூழலை உருவாக்குவதிலான சவால்கள், அது தொடர்பான தகவலறிவுகள் மற்றும் தலையீடுகளை இம்மன்றம் முன்னிலைப்படுத்தியது.

இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பீ. நந்தலால் வீரசிங்க, "குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் தொழில் முனைவு சார்ந்த மனப்பான்மையை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை இந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது. தொழில்முனைவு பற்றிய எண்ணத்தை கடைசி முயற்சியாக தெரிவு செய்வதை விடுத்து, ஒரு விருப்பத்திற்குரிய தொழில் தெரிவாக மாற்றுவது நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்பதை இது அங்கீகரித்துள்ளது. பல்வேறுபட்ட தொழில்துறைகள் மற்றும் தனித்துவமான பண்புகள் மற்றும் வாய்ப்புகளை கருத்தில் கொண்டு, நிறுவன மேம்பாட்டிற்கான சாதகமான சூழல் தொகுதியை உருவாக்குவதில், துறைசாரந்த மற்றும் பிராந்திய ரீதியான கவனம் செலுத்தப்பட வேண்டும்." என்றார்.




# 50,000 பயணிகளுடன் புதிய உயரங்களை எட்டும் FitsAir

இலங்கையின் முதலாவது தனியார் சர்வதேச விமான சேவையான குவைளயுசை, ஆறு மாதங்களுக்கு முன்னர் தனது செயற்பாடுகளை ஆரம்பித்ததிலிருந்து 50,000 இற்கும் அதிகமான பயணிகளுக்கு சேவை வழங்கியதன் மூலம் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது.

இச் சாதனையானது விமானத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அதிலும் குறிப்பாக மூன்று இடங்களுக்கு மாத்திரமே குவைளயுசை சேவைகளை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அனைவருக்கும் கட்டுப்படியான விலையில் மற்றும் வசதியான விமானப் பயண தெரிவுகளை வழங்கும் நோக்கத்துடன் குவைளயுசை தனது சர்வதேச பயண சேவைகளை 2022 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்தது. அப்போதிருந்து, அதன் சேவைகளுக்கான தேவையை கணிசமான அதிகரிப்பை இவ்விமான நிறுவனம் முகம் கொடுத்து வருகின்றது. குறிப்பாக அதன் கட்டுப்படியான விலை மற்றும் வசதியின் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

Fits Aviation (Pvt) Ltd நிறுவனத்தின் பணிப்பாளர் அம்மார் காசிம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதுடன், எமது பயணிகளிடமிருந்து பல்வேறு சாதகமான விமர்சனங்களைப் பெற்றதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மைல்கல்லானது, எமது பயணிகளுக்கு பாதுகாப்பான, சௌகரியமான மற்றும் வசதியான விமானப் பயணத்தை வழங்குவதில் எமது குழுவினர் கொண்டுள்ள கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்" என்றார்.



# Daraz தலைமையகம் திறப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க Daraz Sri Lankaவின் புதிய தலைமையகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மற்றும் SLASSCOM இன் தலைவர் ஆஷிக் அலி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.இத்தலைமையகம் 100/1 எல்விட்டிகல மாவத்தை கொழும்பில் அமைந்துள்ளது.

இச் செயற்பாடு குறித்து னுயசயண Sri Lanka இன் முகாமைத்துவப் பணிப்பாளர் ரக்கில் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "எமது ஊழியர்களுக்கும், உள்ளூர் தொழில்நுட்பத் துறைக்கும் ஒரு அலுவலகம் என்னவாக இருக்க முடியும் என்பதன் கற்பனையை மிஞ்சிய பணியிடத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். புதிய Daraz தலைமையகம் எங்கள் ஊழியர்களுக்கு ஒரு நீண்ட கால முதலீடாகும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் இது எங்களின் ஆற்றல்மிக்க பணியாளர்களை பொருத்தவரை எப்போதும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ற இடமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்."எனக் கூறினார்.






# Link Natural இன் புதிய விற்பனை நிலையம்

CIC Holdings இன் உபநிறுவனமான Link யேவரசயட நிறுவனம் 'Swastha by Link Natural' எனும் பெயரில் புதிய தனித்துவமான விற்பனை நிலையத்தை இல 06, மெயிட்லன்ட் கிரசன்ட், கொழும்பு 07 என்ற முகவரியில் 24.03.2023 இல் திறந்து வைத்துள்ளது.

ekJ Link Natural காட்சியறைக்கு விஜயம் செய்யும் ஒருவருக்கும் நமது நிறுவனத்தின் செயற்பாடுகள் எவ்வாறு செய்யப்படுகின்றன, என்ன வழிமுறையில் செய்யப்படுகின்றன மற்றும் நமது நிறுவனத்தின் நோக்கம் என்பன மிகவும் கருத்து ரீதியாகக் காண்பிக்கப்படுகின்றன.

நவீன வசதிகளுடன் அமைதியான சூழலில் அமைந்திருக்கும் இந்த நிலையமானது வாடிக்கையாளர்களுக்கு முழுமையான ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளுக்காக வழி வகுப்பதுடன், புது வித அனுபவத்தையும் பெற்றுத் தரும்.

Link Natural நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படும் முழு அளவிலான 430ற்கும் அதிகமான தயாரிப்புக்கள் பற்றி அறிந்து கொள்ளவும், தங்களுக்கு விருப்பமான பொருட்களை சௌகரியமான முறையில் கொள்வனவு செய்யவும் முடியும்.



# இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு கணினிகளை வழங்கிய HNB

இலங்கையின் மிகவும் டிஜிட்டல் மயமான வங்கியான HNB PLC, இலங்கை தேசிய வைத்தியசாலையின் (NHSL) இதயநோய் பிரிவுக்கு ஏழு VDI Mini கணினிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அதன் மூலம் "உங்களுக்காகவே நாம்ஸ" திட்டத்தின் ஊடாக தேசிய சுகாதாரத் துறைக்கு உதவும் அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது.

கோவிட் தொற்றுநோயின் ஆரம்பத்திலிருந்து சுகாதாரப் பாதுகாப்புத் துறை எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்தில் கொண்டு, சுகாதாரத் துறைக்கு பொருட்கள் மற்றும் இயந்திரங்களை வழங்கி உதவுவதற்கான பிரச்சாரங்களை HNB மேற்கொண்டு வருகிறது.

HNB Chairperson தலைவி திருமதி அருணி குணதிலக்க கூறுகையில், "தொழில்நுட்பம் மாற்றத்தை ஏற்படுத்தி இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சக்தியைக் கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோய் ஆரம்பித்ததில் இருந்து எமது ஆதரவு மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளை அடையாளம் காண அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளோம். எம்மால் முடிந்தவரை அனைத்து நோயாளிகளுக்கும் சேவைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்கு சாத்தியமான இடங்களில் கைகொடுக்க நாங்கள் உறுதிப்பூண்டுள்ளோம்." என தெரிவித்தார்.